**இலங்கை முதலீட்டுச் சபை - 2021**
---------------------------------------------------

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை முதலீட்டுச் சபையின் ''சபை'' 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5. நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| குறித்த நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **<u>இ.க.நி-16</u>**<br>05 வலயங்களிலுள்ள ரூபா 134,775,645 பெறுமதியான 08 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டதுடன் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் சபை அச்சொத்துக்களை மூலதனமாக்கியிருக்கவில்லை.<br>ஆகவே இலங்கை கணக்கீட்டு நியமம் 16 (LKAS 16) 7 ஆம் பந்திக்கு முரணாக அதே தொகையால் மூலதன நடைமுறை வேலை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.<br>அதேபோல LKAS 16 இன் 43 | SEPZ, MEPZ என்பவற்றிலுள்ள செயற்திட்டங்கள் 2022 இல் மூலதனமாக்கப்பட்டுள்ளன. WEPZ இலுள்ள செயற்திட்டங்கள் மூலதனமாக்கப்படவுள்ளன.<br>MEPZ இலுள்ள மின்சார இணைப்பு செயற்திட்டமானது 2022 இல் மூலதனமாக்கப்படவுள்ளது. ஏறாவூர் செயற்திட்டங்கள் மூலதனமாக்கப்படும். | பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் உரிய வேளைக்கு இனங்காணப்பட்டு மூலதனமாக்கப்படுதல் வேண்டும். |

ஆம் பந்திக்கு முரணாக பெறுமானத் தேய்வு ரூபா 4,990,565 ஆல் குறைத்துக் காட்டப்பட்டதுடன் மிகை அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 102,138,350 தொகையான ஏனைய கடன்பட்டோர் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்கு சபைக்குச் சார்பாக இருந்த போதிலும் சபை அதனை முழுமையாக பெறுமதி குறைப்புச் செய்திருந்தது. | முதலீட்டுச் சபைக்கு எதிராக தீர்ப்புக் கூறப்பட்ட மத்தியஸ்த வெகுமதியை நடைமுறைப்படுத்துவதற்காக வணிக உயர் நீதிமன்றத்தால் BOI கணக்கிலிருந்து தடுத்துவைக்கப்பட்ட ரூபா 102,138,350 தொகையை விடுவிக்குமாறு வேண்டி BOI இனால் தொடுக்கப்பட்ட CA/RI/08/2016 ஆம் இலக்க வழக்கு இன்னும் விசாரிக்கப்பட்டு வருகிறது. ஆகவே நீதிமன்ற வழக்கிற்கு தீர்ப்பளித்தலானது இன்னும் காத்திருக்கும் நிலையில் இருப்பதனால் கடன் ஆபத்து உயர்வாக இருப்பதன் காரணமாக 100% ஏற்பாடு செய்யப்பட்டது. | வழக்கு சபைக்கு சாதகமாக இருப்பதன் காரணமாக பெறுமதிக் குறைப்புக்கான விகிதத்தை கணிப்பீடு செய்வதனை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | சபையுடனான உடன்படிக்கைகளை முடிவுறுத்திய/ நிராகரித்த 06 தொழில் முயற்சிகள் தொடர்பான காணி வட்டத்தின் ரூபா 185,178,544 தொகையான பிற்போட்ட வருமானம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதனது கணக்குகளில் வைத்திருந்தது. | 2021-06-11 ஆந் திகதி ஒரு தொழில்முயற்சியின் உடன்படிக்கை நிராகரிக்கப்பட்டதுடன் இது 2022 ஆம் ஆண்டில் செம்மையாக்கப்படும். பல்வேறு காரணங்களினால் அனைத்து தொழில் முயற்சிகளும் தொடர்புபட்ட செயற்திட்டங்களை அமுல்ப்படுத்த தவறிவிட்டன. எனவே 2022 ஆம் ஆண்டில் செம்மையாக்கல் மேற்கொள்ளப்படும். | காணி வட்டத்தின் பிற்போட்ட வருமானமானது கவனமாக மீளாய்வு செய்யப்பட்டு வேண்டப்பட்ட செம்மையாக்கல்களை தேவைப்படும் போது மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | ஹொரண ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தின் நிருவாகக் | கவனம் செலுத்தப்பட்டது. | சொத்துக்களுக்கு சரியாக பெறுமானத் தேய்வு செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடம் தொடர்பான பெறுமானத் தேய்வும் திரண்ட பெறுமானத் தேய்வும் முறையே ரூபா 543,096 மற்றும் ரூபா 2,926,681 தொகைகளால் குறைத்துக் காட்டப்பட்டன. | | வேண்டும். |
| (ஈ) | 2012- 2018 காலப்பகுதியின் போது வீடமைப்பு செயற்திட்டங்களை மாற்றம் செய்வதற்கான வருமானங்களை சேகரித்தல் தொடர்பாக முற்பண பெறுவனவுக் கணக்கில் ரூபா 3,464,665 தொகை செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டு செம்மையாக்கலாகக் கருத்தில் கொள்ளப்படாது 2021 ஆம் ஆண்டின் நானாவித வருமானமாக செலவு வைக்கப்பட்டது. | இத்தொகைகள் 2021 ஆம் ஆண்டில் மிகைகக் கொடுப்பனவாக இனங்காணப்பட்டு 2021 ஆம் ஆண்டில் வருமானக் கணக்குகளிற்கு மாற்றப்பட்டன. இது முன்னைய ஆண்டுகள் தொடர்பான வருமானமல்ல. அதேவேளை இது ஒரு வருமானமாகக் கருதக்கூடிய ஒரு தொகையாக 2021 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டது. | வருமானங்கள் உரிய ஆண்டில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | 2015 இலிருந்து 2019 வரையான ஆண்டுகளின் போது தளவாடகை, காணி தவணைக்கட்டம், ஆண்டுக் கட்டணம் என்பன தொடர்பாக முற்பண பெறுவனவு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 3,782,236 தொகையானது முன்னைய ஆண்டு செம்மையாக்கலாக கருத்தில் கொள்ளப்படாது 2021 ஆம் ஆண்டின் நானாவித வருமானமாக கணக்கீடு வைக்கப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டுகளின் போது பல்வேறு தொழில் முயற்சிகளால் இம்மிகைக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. இவைகள் 2021 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு அதே ஆண்டில் வருமானமாக கருதப்பட்டது. | வருமானங்கள் உரிய ஆண்டில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | 2011 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்ட ஒரு கம்பனி தொடர்பான ரூபா 2,855,264 தொகையான மீளளிக்கக்கூடிய வைப்பானது முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கலாக கருத்தில் கொள்ளப்படாது மீளாய்வாண்டில் வருமானக் கூற்றிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | 2003 ஆம் ஆண்டிலிருந்து ஒரு தொழில்முயற்சியால் செலுத்தப்பட்ட ரூபா 2,855,264 தொகையான மீளளிக்கக்கூடிய வைப்பானது மீளப்பெறப்படாது காணப்பட்டதனாலும் 2011 ஆம் ஆண்டில் உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டதனாலும் 2021 ஆம் ஆண்டில் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது. | வருமானங்கள் உரிய ஆண்டில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2007 நவம்பர் மாதத்தில் ஒரு தொழில் முயற்சி காணிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,580,365 தொகையானது அதே சமயத்தில் இழப்பீட்டுக் கணக்கிற்கு எதிராக வைப்பிற்கு செலவு வைக்கப்பட்டதுடன் இத்தொகையினை முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கலாக கருத்தில் கொள்ளப்படாது 2021 ஆம் ஆண்டின் நானாவித வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கவனம் செலுத்தப்பட்டது. | வருமானங்கள் உரிய ஆண்டில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஏ) | 2018 மார்ச் 29 ஆந் திகதி அரசாங்கத்தினால் இலவச மானியமாக சபைக்கு மாற்றப்பட்ட 3.96 ஏக்கர் பரப்பளவான காணியானது மதிப்பீடு செய்யப்பட்டு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. | 3.96 ஏக்கர் பரப்பளவான இக்காணியின் உரிமையாண்மையானது 2018-03-29 ஆந் திகதி இலவச மானியமாக BOI இற்கு மாற்றப்பட்டது. இக்காணியை முதலீட்டாளருக்கு குத்தகைக்கு வழங்கும் நோக்கத்திற்காக அரசாங்க மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்படவில்லை. எனினும் மேற்கூறிய மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்யப்படாத காணியின் பெறுமதி வழங்கப்படவில்லை. | சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்குவைக்கப் படுதல் வேண்டும். |
| (ஐ) | மூலதன நடைமுறை வேலையில் (CWIP) உள்ளடக்கப்பட்ட ரூபா 516,964,285 பெறுமதியான மிரிஜாவல ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திலுள்ள வீதிகள் செயற்திட்டமானது 2017 திசெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை எனவே 2017 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் பெறுமானத் தேய்வு ரூபா 25,848,214 ஆல் குறைத்துக் | ஒப்பந்த பிணக்குகளின் காரணமாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான ஒப்பந்தத்தின் இறுதிக் கொடுப்பனவானது செலுத்தப்பட்டிருக் கவில்லை. கடந்த காலத்திலும் இந்த விடயம் மீளாய்வு செய்யப்பட்டதுடன் பிணக்கு தீர்க்கப்பட்டதன் பின்னரே வீதியின் கிரயத்தை மூலதனமாக்கலாம். இது 2022 நிதி ஆண்டின் போது விபரமாக மீளாய்வு செய்யப்படும். | ஒப்பந்த பிணக்குகள் உடனடியாக தீர்த்துவைக்கப்பட்டு சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டிருந்தது. மேலும் வீதி அபிவிருத்தி அதிகாரச் சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 130,383,717 மீதியானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. | | |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) ஒரு கம்பனி 2018 ஆம் ஆண்டில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் தொடக்கத்திலிருந்து ரூபா 97,788,426 தொகையான நில வாடகையினைச் செலுத்த தவறியிருந்தது. கம்பனியிடமிருந்து நிலுவைத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு எந்த முயற்சியும் எடுக்காது மேற்கூறிய மீதிக்கு எதிராக சபை 100 சதவீதமான பெறுமதிக் குறைப்புச் செய்திருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் சபை அதனது கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறியமையினை சவாலுக்கு உட்படுத்தி கம்பனி நில வாடகைக் கொடுப்பனவினை செலுத்த தவறியிருந்ததுடன் முன் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டதன் பின்னரேயே உரிய நில வாடகைக் கொடுப்பனவினை அவர்கள் மேற்கொள்வார்கள் எனவே அதிக கடன் ஆபத்தினைக் கருத்தில் கொண்டு முதலீட்டுச் சபை பெறுமதிக் குறைப்பிற்காக 100% ஆன பெறுமதிக் குறைப்பினைச் செய்திருந்தது. | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சபை அங்கீகரித்த தொழில் முயற்சிகளிடமிருந்து 2021 திசெம்பரில் பெறவேண்டியவைகள் ரூபா 737,308,534 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 170,396,676 அல்லது 23 சதவீதம் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் காணப்பட்டிருந்தன. பெறவேண்டியவைகள் மீதான பெறுமதிக் குறைப்பிற்கான ஏற்பாடு ரூபா 418,846,474 ஆக இருந்ததுடன் இது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய மொத்த | ஒரு சொத்தின் அல்லது அதனது பணம் உருவாக்கும் அலகின் கொண்டிருக்கும் தொகையானது அதனது அறவிடக்கூடிய தொகையை மிகைக்கும் வேளையில பெறுமதிக் குறைப்பு நட்டம் அடையாளம் காணப்படுகின்றது. பெறுமதிக்குறைப்பு நட்டங்கள் வருமானக் கூற்றில் காட்டப்படுகின்றன. | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையின் 57 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. | | |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 776,797,006 தொகையான பதவியினர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதியினுள் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட, பதவியை வறிதாக்கிய மற்றும் கொடுப்பனவு நிறுத்தப்பட்ட 25 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,222,035 தொகை 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் காணப்பட்டது. | அதற்கிணங்க மேற்கூறப்பட்டவாறு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தற்பொழுது இடம் பெற்று வருகின்றது. | பதவியினர் கடன்களையும் முற்பணங்களையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | |
| | (i) நிதிப்பிரமாணங்கள் 103,104 மற்றும் 1642 | 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 15 வாகன விபத்துக்கள் தொடர்பாக பொலிசுக்கு அறிவிக்கப்படாததுடன் தொடக்க புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | எதிர்காலத்தில் வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை முதலீட்டுச் சபை முழுமையாக பின்பற்றும் | நிதிப்பிரமாணங்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| | (ii)நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்களுக்காக ஒரு பதிவேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | ஒரு விபரமான பதிவேடு பேணப்படும். | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| **(ஆ)** | **பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை** | | | |
| | (i) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்கம் | திறைசேரியின் அங்கீகாரமில்லாது மீளாய்வாண்டின் போது ரூபா 666,716,143 தொகையான 10 படிகள் மற்றும் ரூபா 420,800,245 தொகையான 13 கடன்களும் நலன்புரித் | 2020-07-24 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் இந்த விடயத்தை நாங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்து முதலீட்டுச் சபையினால் செலுத்தப்படுகின்ற | வேண்டப்பட்ட அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திட்டங்களும் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. | படிகளுக்கு அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது.ஆனால் அவர்களின் தீர்மானம் இன்றுவரை கிடைக்கவில்லை. | |
| (ii) | 2015 மே 25 ஆந் திகதிய PED/2015 ஆம் இலக்க, 2016 ஒக்தோபர் 26 ஆந் திகதியிட்ட PED/2015(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 3.1 மற்றும் 2020 சனவரி 27 ஆந் திகதிய PED 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 1.2 | • சுற்றறிக்கைக்கு முரணாக எரிபொருள் வரம்புகளானது பின்வருமாறு மாற்றப்பட்டிருந்தது.<br>தலைவர்- வேண்டப்பட்டவாறு<br>பணிப்பாளர்- 300 லீட்டர்கள்<br>நிறைவேற்றுப் பணிப்பாளர்- 170 லுற்றர்<br>பணிப்பாளர்- 140 லீற்றர் | தரப்பட்ட விடயம் சரியானது முதலீட்டுச் சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களது விரிவான பயண வேண்டுதல்களை (வலயங்கள், கருத்தரங்குகள் முதலியவற்றுக்கான பயணங்கள்) ஆழமாகப் பகுப்பாய்வு செய்து சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் வரம்பினை சபையின் பணிப்பாளர்கள் தீர்மானித்துள்ளார்கள். | சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றுதல் வேண்டும். |
| | | • சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமைபெபற்றுள்ள 33 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 11,134,215 கூட்டு மொத்தமான ரூபா 35,000 மாதாந்த சராசரிப்படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | முதலீட்டுச் சபையின் சாரதிகளுக்குப் பதிலாக கூலிக்கு அமர்த்தப்பட்ட சாரதிகளுக்காக ரூபா 15,000/= மாதாந்த படியினைச் செலுத்துவதற்கு முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை 2003 ஆம் ஆண்டில் தீர்மானித்திருந்தது. இக்கொடுப்பனவானது 15 ஆண்டுகளாக மாற்றமின்றிக் காணப்பட்டதனால் 2020 ஆம் ஆண்டில் இப்படியினை அதிகரிப்பதற்குத் தீர்மானித்திருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (iii) | PED/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவு | ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள ஏற்பாடுகளைக் கருத்தில் கொள்ளாது மீளாய்வாண்டின் போது ‘‘விசேட அலகு’’ ஒன்றினைத் ஸ்தாபிப்பதற்காக ஒன்பது | அதிக திறமை கொண்ட தொழில் வல்லுனர்களைக் கவரச் செய்வதனாலும் தொழிலின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு சமாந்திரமாக இருப்பதனாலும் | ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு அவர்களின் சம்பளங்களானது ''சம்பளங்கள் பேசித் தீர்க்கக்கூடியது'' என விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. | விசேட அலகிற்கு பதவியினர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு பிரசுரித்த பத்திரிகை விளம்பரமானது ஊதியம் பேசித் தீர்க்கக்கூடியது மற்றும் சந்தை விலைக்கு சமமானது என்பதனைச் சுட்டிக் காட்டுவதுடன் இப்பதவிக்கு நியமிப்பவர்களுக்கு கொடுப்பதாகத் தெரிவிக்கின்ற சம்பளங்களும் ஏனைய நலன்களும் அரசாங்கத்துறையிலுள்ளவர்களின் சம்பளங்களையும் நலன்களையும் விட அதிகமானது என்பதனை வெளிப்படுத்துகின்றது. | |
| • பிரிவு 9.3.1 (viii) | சபையின் எதிர்கால மனிதவள வேண்டுதல்களுக்கான ஒரு பதவி உரிமைத் திட்டத்தினை முதலீட்டுச் சபை பேணியுள்ளது என்பது கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதவி உரிமைத் திட்டமானது ஒரு தொழில்சார் அமைப்பினால் அல்லது அனுபவமுள்ள மற்றும் குறித்த ஒரு விடயத்தில் விசேட நிபுணத்துவமுள்ள ஒரு தனிப்பட்டவரினால் தயாரிக்கப்படவேண்டும் என்பது முகாமைத்துவத்தின் அபிப்பிராயமாகும். அதற்கிணங்க பதவி உரிமைத் திட்டத்தினை தயாரிக்கும் நடைமுறையானது செயற்பாட்டில் உள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

**(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை**

-----------------------------

| | | | |
|---|---|---|---|
| 02/2016 ஆம் இலக்க 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 14.1 ஆம் பிரிவு | 21 மூன்றாம் மட்ட பதவிகளிலுள்ள 242 உத்தியோகத்தர்களுக்கு விசேட படியாக ரூபா 10,704,620 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது செலுத்துவதற்கு தகமையற்றதாகும். | சபையின் நிறைவேற்று தரமானது 1978 இல் நிறைவேற்று உதவியாளர் பதவியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதுடன் அவர்கள் நிறைவேற்றுனர்களின் அனைத்து உரிமைகளுக்கும் தகமை பெற்றிருக்காததுடன் சபையின் நிறைவேற்றுனர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தார்கள். எனினும் 30 மற்றும் 30(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் கீழ் 2006 ஆம் ஆண்டின் சம்பள மீளமைப்பில் மேற்கூறிய நிறைவேற்று உதவியாளர்கள் தங்களது தொழில் சபையில் நிறைவேற்றுனராக இருந்தும் அத்துடன் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையில் பின்பற்றப்பட்ட நடைமுறை இருந்தும் மேற்கூறிய நிறைவேற்று உதவியாளர்கள் கனிஷ்ட இமுகாமையாளரின் (JM) கீழ் அமர்த்தப்பட்டிருந்தனர்.மேற்படி முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போது இரண்டு(02) வருடங்களுக்கும் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும். |

மேலாக இக்கொடுப்பனவுகளே மற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,363,405,054 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 886,892,760 ஆகும். ஆகவே நிதி விளைவுகளில் ரூபா 476,512,294 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மொத்த செயற்பாட்டு செலவுகள் ரூபா 197,316,297 ஆல் அதிகரித்ததற்கு எதிராக வருமானம் மற்றும் நிதி வருமானம் முறையே ரூபா 659,882,294 மற்றும் ரூபா 8,186,971 ஆல் அதிகரித்தமை இதற்கு காரணமாகும்

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) ஒவ்வொரு மொத்த மூலதன நடைமுறைவேலையின் 63.6 சதவீதத்தினையும் 91 சதவீதத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்திய முறையே ரூபா 568,142,375 மற்றும் ரூபா 224,192,401 பெறுமதியான பொது செயற்திட்டங்களையும் விசேட செயற்தட்டங்களையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 4 ஆண்டடுகளுக்கு மேற்பட்ட காலம் மாற்றமின்றி காணப்பட்டன. | இரண்டு செயற்திட்டங்களைத் தவிர்த்து மற்றைய செயற்திட்டங்களின் எஞ்சியுள்ள மீதிகளை நடைமுறை நிதி ஆண்டில் செம்மையாக்குவதற்கு பெருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக விபரமாக மீளாய்வு செய்யப்படும். | செயற்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்து அதற்கிணங்க மூலதனமாக்குதல் வேண்டும். |
| (ஆ) தலைமை அலுவலகக் கட்டடிடத்தின் 02 மாடிகளை 03 அமைச்சுக்களுக்கும் மற்றும் வலைய கட்டிடங்களை வெளித்தரப்பினர்களுக்கும் சபை வாடகைக்கு வழங்கியிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) ஒரு இராஜாங்க அமைச்சினை உள்ளடக்கி 40 வெளித்தரப்பினர்கள் சபை தலைமை அலுவலகக் கட்டிடத்தினதும் வலய வளவுகளினதும் 43,931.59 | பெற்றிக் கைத்தறிப் புடவை மற்றும் உள்ளூர் ஆடை உற்பத்தி அமைச்சு 3,800 சதுர அடி தளபரப்பினை பயன்படுத்டுத்துவதுடன் குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. ஆனால் மாதாந்த | உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சதுர அடிகளை தலா ஒரு மாதத்திற்கு ரூபா 16,446,233 தொகைக்குபயன்படுத்திய போதிலும் உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படவில்லை. | வாடகையை ஒழுங்காக செலுத்தி வருகின்றது. வெளித்தரப்பினர்களுக்கு வாடகைக்கு வழங்கிய வலயக் கட்டிடங்களின் நிலைமையானது தரப்பட்டுள்ளது. | |
| | (ii) | இரண்டு அமைச்சுகளுக்கு உரிய காலத்தில் இன்வொயிஸ்களை அனுப்பத் தவறியதன் காரணமாக ரூபா 13,466,838 மொத்த வாடகையை சேகரிக்க முடியாது போனதுடன் 2020 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூபா 4,934,018 தொகை அறவீடு செய்யப்பட்டிருக் கவில்லை. | முதலீட்டுச் சபையுடன் குத்தகை உடன்படிக்கைகளில் கையொப்பமிடுமாறு அமைச்சுக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. விமானத் துறை மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு 2022 மார்ச் வரையும் வாடகையை செலுத்தியுள்ளது. சுற்றுலாத் துறை அமைச்சிடமிருந்து 2021 ஆம் ஆண்டு தொடர்பாக தற்பொழுது ரூபா 1,000,000 தொகை மாத்திரம் நிலுவையாக உள்ளது. | இன்வொயிஸ்கள் உரிய காலத்தில் வழங்கப்படுதல் வேண்டும். |
| (இ) | | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடன் சுற்றாடல் தாக்க ஆய்வு அறிக்கையினைத் தயாரிப்பதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் உடன்பட்ட தொகை ரூபா 4,180,000 ஆக இருந்த போதிலும் பிங்கிரிய கரபன் ஓயாவினூடாக சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை விடுவித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதன் காரணமாக ஆய்வின் பரப்பெல்லையை விரிவுபடுத்தி ஆய்வின் பிரேரணை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் சபை அதற்காக ரூபா 1,652,500 மேலதிக செலவினை மேற்கொள்ளவேண்டியிருந்தது. | தொடக்கப் பிரேரணையானது உலர்தல் அடிப்படையிலான கைத்தொழில்களை (கைத்தொழில் கழிவுநீர் உருவாக்கம் இல்லாதவைகளை) மாத்திரம் குடியமர்த்துவதுடன் வேண்டப்பட்ட சுத்திகரிப்பின் பின்னர் சாக்கடைகளையும் உள்ளக கழிவு நீர் உருவாக்கம் (இல்லாதவை) மாத்திரம் குடியமர்த்துவதுடன் வேண்டப்பட்ட சுத்திகரிப்பின் பின்னர் சாக்கடைகளையும் உள்ளக கழிவு நீர்களையும் ‘‘கரபன் ஓயாவிற்குள்’’ விடுவிப்பதுமாகும். எனினும் இரண்டு காரணங்களால் நீர் கழிவு நீர், ஆபத்தான கழிவு நீர், ஆகாயத்தில் புகை வெளியேற்றம் ஆகிய துறைகளில் மேலதிக ஆய்வுகள் வேண்டப்பட்டன. ஒலி/அதிர்வு மட்டங்களிலும் மேலதிக அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. | மிகைச் செலவுகளின் முரண் 47 சதவீதுமாகும். ஆகவே சாத்தியமான அளவிற்கு சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 ஆம் ஆண்டின் போது 07 வழங்குனர்களிடமிருந்து தகவல்களைச் சேகரித்துக்கொள்ளாததும் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாதும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் செலுத்த வேண்டிய ரூபா 1,144,695 தொகை நானாவித வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வுக் குழுவின் பணிப்புரையின் படி மூன்று ஆண்டுகளுக்கு மேலாக கோரப்படாது காணப்பட்ட மீதிகள் மீளாய்வு செய்யப்பட்டு கோரப்படாத தொகைகள் 2021 ஆம் ஆண்டில் வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டன. | பணத்தை செலுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தெரிந்து கொள்வதற்காக சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களுக்காக பணிப்பாளர்கள் சபையின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் |
| (உ) | ஒவ்வொரு வலையத்தினாலும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுகின்ற கைத்தொழில் பிரதேசங்களின் அளவானது நிதிப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலீட்டு ஆதனங்களின் அளவுடன் சமப்பட்டிருக்காததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 627.5 ஏக்கர் தேறிய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. ஆகவே பல காணிகளின் பரப்பளவினதும் பெறுமதியினதும் சரியான தன்மை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | கணக்கிணக்கம் சமர்ப்பிக்கப்படுகின்றது. | இது கணக்கிணக்கம் செய்யப்படவேண்டியதுடன் பரப்பளவானது வலயங்களிலும் நிதிப்பிரிவிலும் சமமாக இருத்தல் வேண்டும். |
| (ஊ) | மல்வத்தை வலயத்திலுள்ள 02 ஏக்கர் பரப்பளவான காணியும் 3906 சதுர மீட்டர்கள் அளவிலான கட்டிடமும் 2012 ஆம் ஆண்டில் ஒரு கம்பனிக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>ஆகவே ரூபா 24.1 மில்லியன் தொகையான தளவாடகை, காணிவட்டம், நீர் மற்றும் கழிவு நீர் கட்டணங்கள் 2014 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | முதலீட்டுச் சபையுடன் ஒரு உடன்படிக்கையை செய்து கொள்வதற்கு முதலீட்டாளருக்கு முதலீட்டுச் சபை அறிவித்திருந்தது. ஆனால் முதலீட்டாளர் அதை செய்திருக்கவில்லை. | விடயங்கள் தீர்த்துவைக்கப்பட்டு உடன்படிக்கை செய்வதன் மூலம் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மிலேனியாவில் ஒரு ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தினை ஆரம்பிப்பதற்கு அப்போதைய முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ரூபா 1,988 மில்லியன் தொகையினை சபைக்கு வழங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை . | **மீலேனிய EPZ** காணியை குத்தகைக்கு வழங்குனர் காணியை பெற்றுக்கொள்வதனைத் தடுப்பதற்காக அமைச்சுக்கு எதிராக 2019-05-24 ஆந் திகதி ஒரு வழக்கினைத் தாக்கல் செய்திருந்தார். இது இன்னும் தீர்த்து வைக்கப்படவில்லை. எனவே மிலேனியா வலயத்திற்கு வெளிக்கள உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் 2019-05-24 இலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.<br><br>**பிங்கிரிய EPZ** ஒரு நிறுவனம் வணிகச் செயற்பாட்டினைச் செய்வதுடன் மற்றைய இரண்டு நிறுவனங்களும் நிர்மாணங்களை மேற்கொண்டு வருவதுடன் செயல்முன்னேற்றம் நன்றாக உள்ளது. | கூட்டிணைந்த திட்டத்தில் திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினுாடாக (NWS & DB) உரிய வேளைக்கு நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக தண்ணீர் பவுசர்களினுாடாக வதுபிடிவல வலயத்திற்கு நீரை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது சபை ரூபா 4,384,440 தொகையினைச் செலுத்தியிருந்தது. | WEPZ இன் நீர் தேவையானது தலா ஒரு நாளுக்கு அண்ணளவாக 1400 $m^3$ ஆகும். புதிய நீர் வழங்கல் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு வலயத்திற்கு அருகாமையில் நம்பகரமான நீர் வளங்கள் இருக்கவில்லை. | நீர் பவுஸர்களுக்கான வாடகைக் கட்டணமானது குறிப்பிடத்தக்க அளவான தொகையாக இருப்பதனால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து (NWS & DB) நீரை பெற்றுக்கொள் வதற்கு ஒழுங்குகள் செய்தல் வேண்டும். |
| (இ) | தொடக்கத்திலிருந்து சபையின் 14 வலயங்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடன்படிக்கை செய்திருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 740 ஆக | தொடக்கத்திலிருந்து இன்று வரையான 43 ஆண்டுகள் காலத்தில் (1978-2021) மேலே கூறப்பட்ட செயற்ததிட்டங்களின் 440 உடன்படிக்கைகள் நிராகரிக்கப்பட்டது, மூடப்பட்டது | மூடப்பட்ட, இடநிறுத்தப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 50 |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மூடப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட, அல்லது உடன்படிக்கை நிராகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 440 ஆகும். ஆகவே தொடக்கத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் 285 நிறுவனங்கள் மாத்திரம் செயற்பட்டு வருகின்றன. | அல்லது செயற்பாடு இடைநிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடதக்கதாகும். மற்றுமொரு கம்பனியுடன் இணைக்கப்பட்ட அல்லது மற்றொரு கம்பனியால் பெறுப்பேற்க்கப்பட்ட 86 செயற்திட்டங்களையும் இந்த 440 செயற்திட்டப்பட்டியல் உள்ளடக்குகின்றது. இதன் கருத்தாவது அவை தொழில்நுட்ப ரீதியாக செயற்பாட்டிலுள்ளவைகளாகும். உடன்படிக்கைகளுடன் இணங்கியிருக்காமை, கட்டளைகளைப் பின்பற்றாமை, நிதித்தட்டுப்பாடுகள், கம்பனிகளை கலைத்தல் என்பனவே மிகுதி 354 செயற்திட்டங்களின் உடன்படிக்கைகள் நிராகரிக்கப்படல், மூடப்படல் அல்லது செயற்பாடுகள் இடைநிறுத்தப்படுவதற்கு காரணமாகும். இவைகள் மூதலீட்டுச் சபையின் வசதியளித்தல்களுக்கு அப்பாற்பட்டவைகளாகும். | சதவீதத்திற்கு அண்மித்ததாகக் காணப்பட்டதனால் இதனை மீளாய்வு செய்து குறைப்பதற்கான பரிகார நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் (FDI) செயல் முன்னேற்றமானது கடந்த மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன. (அட்டவணை கீழே) | 2019 ஆம் ஆண்டின் போது முதலீட்டுச் சூழலுக்கான பாதகமான தாக்கத்தினை (உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் 2020 கொவிட் தொற்று நோய்) கருத்தில் கொண்டு 2020 ஆம் ஆண்டிற்கான சூழ்நிலையின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட இலக்கானது யூலை மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலத்தில் திருத்தப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டிற்காக தோற்றுவிக்கப்பட்ட புதிய இலக்கு யு.எஸ் டொலர் 0.9-1.1 மில்லியனாகும். தொடர்ச்சியான கொவிட் தொற்று நோயின் தாக்கத்தை கருத்தில் கொண்டு 2021 ஆம் ஆண்டிற்கான நேரடி முதலீட்டு இலக்கு யு.எஸ் டொலர் 1.1 மில்லியனிலிருந்து 1.3 வரை தோற்றுவிக்கப்பட்டது. | நேரடி முதலீட்டினை கவர்வதற்கு தந்திரோபாயங்களை உருவாக்கி இலக்குகளை அடைந்து கொள்ளுதல் வேண்டும். |

| ஆண்டு | கூட்டிணைந்த திட்டத்தின்படி வருடாந்த இலக்கு (அமெரிக்க டொலர் மில்லியன்) | உள்ளபடியான அடையப்பெறுதல்கள் (அமெரிக்க மொலர் மில்லியன்) | வருடாந்த இலக்குகளின் சதவீதமாக உள்ள படியான அடையப்பெறுதல்கள் % |
|---|---|---|---|
| 2021 | 1,100-1,300 | 780 | 60 |
| 2020 | 5,000 | 687 | 14 |
| 2019 | 3,000 | 1,189 | 40 |
| 2018 | 2,500 | 2,367 | 95 |

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டிற்கான இலக்கு 74 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான செயல் முன்னேற்றம் அமெரிக்க டொலர் 780 மில்லியன் மாத்திரமாக இருந்தது.

### 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 1983 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் 31 வரையும் சபையின் 14 வலயங்களுக்குச் சொந்தமான காணிகளின் மொத்த பரப்பளவு 4,045 ஏக்கர்களாக இருந்தது. அதில் 721.5 ஏக்கர் காணிகள் பயன்படுத்தப்படாது வெற்றுக் காணிகளாகக் காணப்பட்டன. | உச்ச அளவு நலன்கள்/வரும்படிகளை பெற்றுக்கொள்ளும் வகையில் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக முதலீட்டுச் சபை வலயக் காணிகளைப் பயன்படுத்துவதற்கு உச்சளவு முதலீட்டுத் தொகையுடனும் ஏற்றுமதி நோக்கத்துடனுமான எதிர்கால முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கான முன்னுரிமையை வழங்கி நலன்களை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டாளர்களுக்கு மத்தியில் வெற்றுக் காணிகளை மேம்படுத்துவதற்கு முதலீட்டுச் சபை தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. | வெற்றுக்காணிகள் உச்ச அளவில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | ஒருங்கிணைந்த கணக்கீட்டு மென்பொருள் முறைமையினைப் பொருத்துதல் 2019 ஏப்ரல் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இது இன்னும் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் 2021 திசெம்பர் 31 இல் | தொடக்க செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம் 9 மாத காலத்திற்குள் ERP அமுலாக்கலினை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த | செயற்திட்டங்கள் உரிய காலத்தில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு ரூபா 3,750,000 மேலதிக செலவினை செலவு செய்ய வேண்டி இருந்தது. | போதிலும் முதலீட்டுச் சபையினால் எதிர்பார்த்த ERP தீர்வுகளின் சிக்கலான தன்மை மற்றும் 2020 ஆம் ஆண்டிலும் 2021 ஆம் ஆண்டிலும் COVID -19 தொற்று நோய் பரவலின் தாக்கத்தின் காரணத்தினாலும் செயற்திட்ட திட்டங்களைப் பூர்த்தி செய்யமுடியாதிருந்தது. | |
| (ஆ) | பிங்கிரிய வலயத்தின் மேற்கு எல்லைப் பகுதியினூடாக சங்கிலி- இணைப்பு வேலியை நிர்மாணிக்கும் ஒப்பந்தமானது ஒப்பந்த காலம் 4 மாதங்கள் எனக் குறிப்பிட்டு ரூபா 32,087,075 கிரயத்திற்கு 2019 ஏப்ரல் 29 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. ரூபா 31,814,285 தொகை செலவு செய்யப்பட்டு 20 மாதங்கள் தாமதத்துடன் செயற்திட்டம் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் பல இடங்களில் வேலியை நிர்மாணித்தல் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் முறையாகப் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது பௌதீக தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் கிழக்கு எல்லையை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும் பெறுகை நடைமுறையேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே செயற்திட்டத்தின் குறிக்கோளான காணியைப் பாதுகாத்தல் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நெற்காணியை வாங்கும் இலக்கு இன்னும் நடைமுறையில் உள்ளது. நெற்காணிகள் மற்றும் RDA ஆல் பொது வீதிக்கான மாற்று வழியை பூர்த்தி செய்யும் வரை வேலி நிர்மாணிபினை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. நெற்காணி வாங்குதல் தொடர்பான விடயம் இன்னும் நடைமுறையில் உள்ளதன் காரணமாக மிகுதியாக உள்ள கிழக்கு எல்லையில் வேலியை நிர்மாணிப்பதனை ஆரம்பிக்க முடியாதுள்ளது. உபவீதியை நிர்மாணிக்கும் வேலை RDA ஆல் பூர்த்தி செய்யப்படும் வரை தொடக்கத்தில் பிங்கிரிய வலயம் கட்டம் I இன் ஊடாக அமைக்கப்பட்டுள்ள பொது வீதியை மூடுவது சாத்தியமற்றதாக உள்ளது. | பணத்திற்கான பெறுமதியை பெற்றுக்கொள்வதற்காக திட்டமிட்டவாறு செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். |

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரித்த பதவியிணர் 1,299 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 1,253 ஆகும். வெற்றிடங்களின் எண்ணிக்கை 128 ஆக இருந்ததுடன் 07 | 2022 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களின் போது 67 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. எனினும், நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட 03/2022 ஆம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படு |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தங்கள் அடிப்படையிலான பதவிகளை உள்ளடக்கி 82 பதவியினர்கள் மிகையாக இருந்தனர். எனினும் ‘‘விசேட குழுவாக’’ சேர்த்துக்கொள்ளப்பட்ட 09 உத்தியோகத்தர்கள் உள்ளபடியான பதவியணியினர்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் மீளாய்வாண்டிற்கான மொத்த ஆளணிக் கிரயம் ரூபா 2,091.8 மில்லியனாக இருந்ததுடன் இது மொத்த கிரயத்தில் 62 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. | இலக்க 2022-04-26 ஆந்திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க அனைத்து ஆட்சேர்ப்புக்களும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள அனைத்து ஊழியர்களும் அமைய/ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களாகும். 29/2019 ஆம் இலக்க 2019-09-18 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் படி அவர்கள் 2019-09-01 ஆந் திகதி நிரந்தர பதவியணிக்குள் உள்ளீர்க்கப்பட்டிருந்தனர். | தல் வேண்டும். |
| (ஆ) | பிரதான ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகளின் இயலுமையினை மேம்படுத்தலின் கீழ் சபைக்கு 29 தொழில்சார் வல்லுனர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு 2021-03-25 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தினை வழங்கியிருந்தது. இது தொடர்பாக ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும் ஆளனி எல்லைக்கும் முரணாக மற்றும் தற்போதுள்ள சம்பள அளவுத் திட்டத்தினை கருத்தில் கொள்ளாதும் ஒவ்வொரு பதவியிலிருந்து குறிப்பிடப்பட்ட பெறுபேற்றினை அடைந்து கொள்ளாதும் மீளாய்வாண்டின் போது 03 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் 09 தொழில்சார் வல்லுனர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர் . | அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள வீச்சில் 29 விசேடத்துவமான ஆளணியினர்களைக் கொண்ட ஒரு குழுவுடன் ஒரு புதிய அலகினை ஸ்தாபித்து முதலீட்டுச் சபையின் மீளமைப்புத் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு 2021-03-23 ஆந் திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகாரத்தினை வழங்கியிருந்தது. மேற்கூறப்பட்ட சம்பள வீச்சுக்கள் சந்தையிலுள்ள சம்பளத்திற்கு சமமானதாக இருந்தது. | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்ததன் பின்னர் 150 நாட்களுக்குள் மூன்று மொழிகளிலுமான ஆண்டறிக்கையுடன் கணக்காய்வு செய்யப்பட்ட இறுதிக் கணக்குகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது 2022 மே 20 ஆந் திகதியிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2021 யூலை 29 ஆந் திகதி கிடைத்திருக்காமையும் அதன் பின்னரே சிங்கள் மற்றும் தமிழ் மொழியிலான மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டமை, முதலீட்டுச் சபையின் முகாமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டமை, என்பன ஆண்டறிக்கையினை முடிவுறுத்துவதில் தாமதம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது.<br>புதிய வரிசை அமைச்சினூடாக (நிதி, பொருளாதாரத்தை நிலைபேறாக்குதல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு) 2020 ஆண்டறிக்கையானது அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | PED 12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் நாளது வரையாக்கிய வருடாந்த பாதீட்டுடன் சேர்த்து பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டிய போதிலும் 2021 நிதி ஆண்டு ஆரம்பித்ததிலிருந்து அண்ணளவாக 07 மாதங்கள் தாமதித்தது . 2021 யூலை 07 ஆந் திகதி சபை | 2020- 2021 காலப்பகுதியின் பொது முகாமைத்துவத்தில் மாற்றங்கள் மற்றும் முதலீட்டுச் சபையியால் காலத்துக்குக் காலம் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களின் காரணமாக கூட்டிணைங்த திட்டத்திற்கான சபை அங்கீகாரம் 2021 யூன் 01 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்படும் வரை 2021 கூட்டிணைந்த திட்டத்தின் பூர்த்தியாக்கல் தாமதித்திருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் படி சபையின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதனது கூட்டிணைந்த திட்டத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைத்திருந்தது. | | |
| (ஆ) | PED/ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின்படி ஒரு கூட்டிணைந்த திட்டமானது மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு செயற்படுத்தப்படும் ஒரு சுழற்சி முறையிலான திட்டமாக இருக்க வேண்டிய போதிலும் சபை 2021 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் கூட்டிணைந்த திட்டத்தினை தயாரித்திருந்தது. மேலும் நிறுவனத்திற்கு கிடைக்க கூடிய நடைமுறை வளங்கள் தாபனக் கட்டமைப்பு, SWOT பகுப்பாய்வு, கடந்த மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விளைவுகளின் பகுப்பாய்வு போன்றவாறான கூட்டிணைந்த திட்டத்தின் தனிச் சிறப்பு வாய்ந்த அம்சங்கள் 2021 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கபப்படவில்லை . | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்டு 2021 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் காரணமாக உலகளாவிய மற்றும் உள்ளூர் முதலீட்டு நிலைமைகளின் மாற்றங்களை முன்னறிந்து கொள்ள முடியாதிருந்தமையானது முதலீட்டுச் சபைக்கு நீண்டகால இலக்குகளைத் தோற்றுவிப்பதில் சிக்கல்களை விளைவித்திருந்தது. எனவே ஒரு இடைக்கால நடவடிக்கையாக கூட்டிணைந்த திட்டமானது 2021 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | சபையின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் வகையில் சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றுதல் வேண்டும். |

**4.3 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 நிதி ஆண்டு தொடக்கத்திலிருந்து அண்ணளவாக 09 மாதங்கள் தாமதித்து மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமானது தயாரிக்கப்பட்டு 2021 செப்தெம்பர் 15 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் இது 2021 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்கியதாக இருக்கவில்லை. | அப்போதைய முதலீட்டுச் சபையின் முகாமைத்துவத்தால் காலத்திற்கு காலம் திட்டமிட்டு அமுல்ப்படுத்தப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களின் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தினைப் பூர்த்தி செய்தல் யூலை மாதம் நடுப்பகுதி வரை தாமத்திருந்தது. | சபையின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் வகையில் சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தினை செயல்முன்னேற்ற அறிக்கையுடன் ஒப்பீடு செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>• 73 நடவடிக்கைகள் | நாட்டில் நிலவும் சூழ்நிலையின் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்கான | செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| முழுமையாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன் செயல் முன்னேற்ற அறிக்கையிலுள்ள 5 நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்ட சில நடவடிக்கைகளை குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யமுடியாதிருந்தது. | அமுல்ப்படுத்தப்பட வேண்டியதுடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் புதிய நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| • முதலீட்டுச் சபைக்கு உரியதல்லாத நிதியினால் (குறித்த சில அமைச்சுக்களிலிருந்து) நிறைவேற்றப்பட்ட 04 நடவடிக்கைகள் வெளித்தரப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்டதுடன் அவ்வாறான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாது அல்லது 2020 ஆம் ஆண்டிலிருந்தேனும் தொடரப்படாதிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடு களுடனான அதன் செயல் முன்னேற்றத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வெளித்தரப்பினர்களின் நிதிகளின் மூலம் வெளித்தரப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளானது முதலீட்டுச் சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தவறுதலாக உள்ளடக்கப்பட்டிருந்தன. இது எதிர்காலத்தில் மீண்டும் நிகழ்வதனைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான தகவல்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |